# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## நிலையறி பரீட்சை – 2021

தரம் 8 | சைவசமயம் | நேரம் -2 மணித்தியாலங்கள்

## பகுதி 1

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**i)பின்வருவன சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.**

1.விநாயகரை வணங்கும் வழிபாட்டு முறைகளில் ஒன்று குட்டிக்கும்பிடுதல் ஆகும் ( )

2.சூரியன் மேடராசியில் பிரவேசிக்கும் காலம் சித்திரை புதுவருடப்பிறப்பாகும் ( )

3.சிவபெருமான் இலிங்கோற்பவ மூர்த்தியாக வெளிப்பட்ட காலம் நவராத்திரி ஆகும் ( )

4.ஆண்கள் ஐந்து அங்கங்கள் நிலத்தில் பொருந்த பஞ்சாங்க நமஸ்காரம் செய்வர் ( )

5.வேதங்களின் பிரிவான உபநிடதங்கள் வேதசிரசு,வேதாந்தம் எனப்படுகின்றன ( )

**ii) பின்வருவனவற்றில் அ பகுதிக்குத் தொடர்பான விடையை ஆ பகுதியில் இருந்து தெரிவு செய்க.**

| அ | | ஆ |
|---|---|---|
| 6. நாள்மங்கலம் | (அ) | உகந்தை முருகன் ஆலயம் |
| 7. உத்தாலகர் | (ஆ) | காளத்தியப்பர் |
| 8. உன்னஸ்கிரி | (இ) | சிதம்பரம் |
| 9. சிவகோசாரியார் | (ஈ) | சுவேதகேது |
| 10.தில்லைமூவாயிரவர் | (உ) | பிறந்தநாள் |

**iii)பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

11. ஆலயங்களில் தினந்தோறும் நடைபெறும் கிரியைகள்

 1.நித்தியகிரியை  2.நைமித்தியகிரியை  3.காமியகிரியை

12. ஆலயக்கருவறையில் சக்கரம் அமைந்துள்ள விஷ்னு ஆலயம்

 1.கதிர்காமம்  2.பெருமாள்கோயில்  3.வல்லிபுரம் ஆழ்வார்கோயில்

13. நடராஜப் பெருமானுக்குரிய விசேட அபிஷேக தினம் **அல்லாதது**

 1.சிவராத்திரி  2.ஆனிஉத்தரம்  3.பங்குனிஉத்தரம்

14. திருமறைக்காட்டிலே வேதங்களால் பூட்டப்பட்ட ஆலயக்கதவை திறக்க தேவாரம் பாடியவர்

 1.சம்பந்தர்  2.அப்பர்  3.சுந்தரர்

15.“அவன் வடிவெல்லாம் நம்மிடத்துக் கொண்ட அன்பேயாம்” என இறைவன் யாருடைய கனவில் கூறினார்?

 1.கண்ணப்பர்  2.நாகன்  3.சிவகோச்சாரியார்

16. தூலலிங்கம் எனச் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படுவது?

 1. சூக்குமலிங்கம்  2.கோபுரம்  3.ஸ்துாபி

17. கண்ணகி வழிபாட்டை இலங்கையில் அறிமுகம் செய்த மன்னன்?

 1.எல்லாளன்  2.துட்டகைமுனு  3.1ம் கஜபாகு

18.“கற்பூரக்கந்தன்”என சிறப்பாக அழைக்கப்படும் ஆலயம்?

 1.கரிர்காமம்  2.நல்லூர்  3.உகந்தைமுருகன்

19. வேதங்களின் பிரிவுகளான சங்கிதைகள் பிராமணங்கள் அடங்கும் காண்டம்?

kalvi.lk

1.கருமகாண்டம் 2.உபாசனாகாண்டம் 3.ஞானகாண்டம்

20. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை ஆலயங்களில் நடைபெறும் நைமித்திய கிரியை?

1.மகோற்சவம் 2.கும்பாவி'கம் 3.மாசிமகம்

(20x2=40புள்ளிகள்)

## பகுதிII

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

**1.பின்வரும் பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி பாடியவர் பெயர்,தலம ்என்பவற்றை எழுதுக.**

1. ''மண்ணில் நல்லவண்ணம்…..''
2. ''பெருகலாம் தவம்…''
3. ''நீளநினைந்தடியேன்….''
4. ''கற்றாங்கெரியோம்பி….''

(6+2+2)x2=20புள்ளிகள்)

**2. ''ஆலயம் தொழுவதுசாலவும் நன்று''**

1. கோயிலின் மறுபெயர் 2 தருக?
2. வருடத்திற்கு ஒரு தடவை நடைபெறும் நைமித்திய கிரியை நான்கு எழுதுக
3. நித்திய பூசை ஆறு காலங்களை எழுதுக?

(2+4+4=10புள்ளிகள்)

**3. ''மூர்த்தி,தலம்,தீர்த்தம் முறையாய் அமைந்து…..''**

1. அழகேஸ்வரம் என அழைக்கப்படும் ஆலயம் எது?
2. இவ் ஆலய இறைவன்,இறைவி,தீர்த்தம்,தலவிருட்சம் என்பவற்றை எழுதுக?
3. இவ் ஆலயத்தின் பழமை கூறும் நூல் எது?அதில் குறிப்பிட்டுள்ள மன்னன் யார்?அவன் செய்த பணிகளை எழுதுக?

(2+4+4=10புள்ளிகள்)

**4.''கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை…..''**

1.கண்ணப்பனின் இளமைப் பெயர் யாது?

2.காளத்திமலைக்குஅருகில் உள்ள ஆறு எது?அங்குள்ள இறைவன் பெயர்யாது?கண்ணப்பர் இறைவனைகண்டதும் கூறிய இரு வார்த்தைகளும் எவை?

3.இடக்கண்ணில் இருந்து இரத்தம் வடிந்தபோதுகண்ணப்பர் யாதுசெய்தார்?இறைவன் அவரைஎவ்வாறுதடுத்துஅருள் செய்தார்?

(2,4,4ஸ்ரீ10புள்ளிகள்)

**5.''இறைவழிபாட்டில் சிறந்ததுவிரதம் ஆகும்''**

1.விரதமாவது யாது?

2.விரதம் அனுட்டிப்பதால் கிடைக்கும் பயன்கள் நான்கு எழுதுக?

3.விரதங்களுக்கு பொதுவாக அமைந்துள்ள விதிகள் நான்கு தருக?

(2+4+4=10புள்ளிகள்)

**6.''கடவுளை நம்பினோர் கைவிடப்படார்''**

1.கடவுள் என்ற சொல்லின் பொருள் யாது?

2.கடவுளின் இயல்புகள் நான்கு எழுதுக?

3.கடவுள் எவ்வாறு உயிர்களுக்கு அருள் பாலிக்கிறார்?

(2+4+4=10புள்ளிகள்)

# GRADE 6,7,8

# STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.



| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
|---|---|
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page